வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ஒ.மு எண் 3209/அ2/2021 நாள் 22.10.2021

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக்கல்வி – குழந்தைகள் தின விழா – 2021 நவம்பர் – 14 ஆம் நாள் அனைத்து வகை பள்ளிகளிலும் குந்தைகள் தின விழா கொண்டாட்டதை முன்னிட்டு குழந்தைகளிடையே கலைநிகழ்ச்சிகள், பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடத்துதல் - தொடர்பாக |
| பார்வை | தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் அவர்களின் கடித எண் 1075/ தமாகுஉபா ஆ / அ3/2021, நாள் 05.10.2021 |

பார்வையில் காணும் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய தலைவரின் கடிதத்தின் படி எதிர் வருகின்ற 2021, நவம்பர் 14 ம் தினத்தன்று ( 14.11.2021) ஒவ்வொரு வருடமும் முன்னாள் பாரத பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த தினத்தை குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுவது வழக்கமான ஒன்றாகும் . ஆனால் தற்போது கொரோனா தொற்று காலத்தில் இருந்து மீண்டு வந்திருப்பதால் 2021, நவம்பர் முதல் தேதி முதல் அனைத்து பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை மாணவர்கள் அதிகப்பட்சம் 20 மாணவர்கள் வகுப்பறையில் இருக்கும் வண்ணம் ஏற்பாடு செய்யப்பட்டு, பள்ளிகள் அனைத்தும் பள்ளிக் கல்வி இயக்ககத்தால் அனுப்பப்பட்ட வழிக்காட்டு நெறிமுறைகளின் படியும் அனைத்து பள்ளிகளும் இயங்க அனுமதிக்கப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழலில் குழந்தைகளின் மன அழுத்தத்தை போக்கும் பொருட்டும், மீண்டும் எழுச்சி பெற்று ஊக்கத்துடன் தனது கல்வியை தொடங்குவதற்கும், விளையாட்டு போன்ற செயல்பாடுகளை மீண்டும் செயல்படுத்தவும், மேற்குறிப்பிட்டுள்ள ( SOP ) வழிக்காட்டு நெறிமுறைகளை பின்பற்றி நவம்பர் 14 ஆம் தினத்தன்று பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி அதன் மூலமாக குழந்தைகளுக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்குறிப்பிட்ட தேதியன்று சிறப்பு நேர்வாக கொண்டு குழந்தைகளிடையே ஒரு சிறந்த எழுச்சியை உருவாக்க அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிகழ்ச்சிகளை நடத்தி, **நவம்பர் 29.11.2021 ற்குள்** கீழ்க்குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க அனைத்து வகை அரசு / அரசு மேல்நிலை / தொடக்க/ நடுநிலை / மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள் முதல்வர்கள் / தாளாளர்கள் / தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**முகவரி**

தலைவர்,
தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்,
எண் 183 / 1.ஈ. வே.ரா. பெரியார் சாலை,
பூந்தமல்லி நெடுஞ்சாலை,
கீழ்ப்பாக்கம் , சென்னை -10.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

**பெறுநர்**,

அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்

அனைத்து வகை பள்ளி தலைமைஆசிரியர்கள்/ மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

**நகல்**

வேலூர் மாவட்டக்கல்வி அலுவலருக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைகாகவும் அனுப்பலாகிறது